DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021 Deposition of Witness for : P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | பிரபு | Caste | |
| Father's Name | : | முருகேசன் | Calling | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | : | 36 | Taluk | பல்லடம் |
| Village | : | பூமலூர் | District | திருப்பூர் |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 13.10.2025

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பூர் தெற்கு வட்டம் முதலிபாளையம் கிராமத்தில் குடியிருக்கிறேன். தற்போது பூமலூர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.10.2018 அன்று தாராபுரம் மற்றும் முளையாம்பூண்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது நல்லசெல்லிபாளையத்தைச் சேர்ந்த பொன்னுசாமி என்கிற ராமசாமி மகன் செல்லமுத்து என்பவர் நான் 3.00 மணியளவில் அலுவலகத்தில் இருந்தபோது நத்தமேட்டு தோட்டம் சோளக்காட்டில் ஒரு ஆண் பிணம் கிடப்பதாக தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தார். அதன் அடிப்படையில் நல்லசெல்லிபாளையம், நத்தமேடு தோட்டம் சோளக்காட்டிற்கு சென்று பார்த்த போது அங்கு பொதுமக்கள் இருந்தார்கள். அந்த இடத்தில் மல்லாந்த நிலையில் ஆண் பிரேதம் ஒன்று இருந்தது அதன் தோள்கள் உறிந்த நிலையிலும் தலை மற்றும் முகத்தில் புழுக்கள் வைத்த வண்ணமும் துணிகள் எதுவும் இல்லாமலும் நிர்வான கோலத்திலும் நெற்றியில் காயத்தோடும் தலையின் இடது பக்கத்தில் காயத்தோடும் இருந்தது. அதன் அருகில் கார்த்திக் பேஷன் கேஷுவல் ஷர்ட் ஒன்று வெள்ளை நிறம் மஞ்சள் நிற கோடு போட்டு இருந்தது. நிகாஷ் என்ற

லேபிளுடன் கருப்பு நிற பேண்ட் ஒன்று இருந்தது இரண்டு துண்டுகளாக கருப்பு நிறத்தில் ஒரு பர்முடாஸ் இருந்தது. கிழந்த நிலையில் ஒரு கருப்பு நிற முண்டா பனியன் இருந்தது. ஒரு ஜோடி கருப்பு நிற செருப்பு இருந்தது. ரத்தக்கரை படிந்த ஒரு ஓடை கல் இருந்தது.

2. அங்கிருந்த பொதுமக்களிடம் விசாரித்த போது மேற்படி பிரேதத்தின் பெயர் மற்றும் விலாசம் தெரியவில்லை என்றும் இறப்பிற்கான காரணம் எதுவும் தெரியவில்லை என்றும், மேற்படி நபர் இறந்து நான்கு அல்லது ஐந்து நாட்கள் இருக்கும் என்றும் சொன்னார்கள் மேற்படி தகவலை நான் என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து விட்டு, மூலனூர் காவல் நிலையம் சென்று எழுத்து மூலமாக புகார் ஒன்றை கொடுத்தேன். நான் கொடுத்த **புகார் அ.சா.ஆ.1.** அதன் அடிப்படையில் மூலனூர் போலீசார் வழக்கு பதிவு செய்து காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அவர்களிடம் நான் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். பின்னிட்டு 24.10.2018 அன்று முளையாம்பூண்டி கிராமத்தில் பணியில் இருந்தபோது காவல் ஆய்வாளர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு 23.10.2018 அன்று கிடைக்கப்பெற்ற அடையாளம் தெரியாத ஆண் பிரேதமானது வெள்ளகோவில் காமராஜபுரத்தைச் சேர்ந்த நாகப்பன் மகன் ராமு என்றும் ராமுவின் மனைவி கவிதா என்பவர் கோவை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பிரேதத்தை அடையாளம் காட்டியதாகவும் தகவல் சொன்னார். என்னையும் அழைத்து விசாரணை செய்தார்.

3. பின்னிட்டு 25.10.2018 அன்று காலை புதுப்பையில் இருந்து, நானும் முளையாம்பூண்டி கிராம உதவியாளர் பொறுப்பு சண்முகம் என்பவரும் வந்து கொண்டிருந்தபோது புதுப்பை அமராவதி ஆற்றின் பாலத்தில் தென்புறமாக மேற்கு பக்கமாக போலீசார் மற்றும் காவல் ஆய்வாளர் நின்று கொண்டு இருந்தார்கள். நாங்கள் அங்கு சென்று பார்த்த போது இரண்டு நபர்கள் இருந்தார்கள் அவர்களது பெயர் ஹரிதாஸ் தந்தை பெயர் ராமசாமி செட்டியார் கவிதா கணவர் பெயர் ராமு என்றும் காவல் ஆய்வாளர் என்னிடம் சொன்னார் ( சாட்சி எதிரிகளை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்). எதிரிகள்

இருவரும் மேற்படி ராமுவை கொலை செய்ததை ஒப்புக்கொண்டார்கள். ஆய்வாளர் எதிரிகள் இருவரையும் என் முன்னிலையில் கைது செய்தார்கள். எதிரி ஹரிதாஸ் தானாக முன்வந்து எந்த விதமான ஆசை வார்த்தைகள் இன்றி ஒரு ஒப்புதல் வாக்கு மூலத்தை கொடுத்தார். பின்னிட்டு எதிரி கவிதா தானாக முன்வந்து எந்த விதமான ஆசை வார்த்தைகள் இன்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரி ஹரிதாஸ் சொல்ல சொல்ல போலீசார் தட்டச்சு செய்து கொண்டார்கள். அதை பதிவிறக்கம் செய்து அதில் மேற்படி ஹரிதாஸ் கையெழுத்து செய்த பிறகு நானும் கிராம உதவியாளர் சண்முகம் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான்.

4. பின்னர் அருகில் இருந்த TN 38 BD 5402 பதிவு எண் கொண்ட டாடா இண்டிகோ மான்ஸா கார் ஒன்றை ஹரிதாஸ் போலீசாரிடம் ஒப்படைத்தார். அதை போலீசார் கைப்பற்றுதல் மகஜர் மூலம் மேற்படி இடத்தில் கைப்பற்றினார்கள். அதில் நானும் கிராம உதவியாளர் திரு சண்முகம் என்பவரும் கையெழுத்துது செய்தோம் மேற்படி **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.2. மேற்படி கார் சா.பொ.1.** பின்னிட்டு மேற்படி எதிரிகள் இருவரும் ராமுவை கொலை செய்த இடத்தை காட்டினார்கள். பின்னிட்டு அங்கிருந்து ஓடைகல் ஒன்றை எதிரிகள் இருவரும் போலீசாரிடம் ஒப்படைத்தார்கள். அதை போலீசார் இரண்டு சாட்சிகள் முன்பு கைப்பற்றினார்கள். பின்னிட்டு புதுப்பை ஆற்றுப்பாலத்தில் புதருக்குள் இருந்து ஒரு இரத்தக்கரை படிந்த வெளிறிய சந்தன நிறம் கொண்ட அரைக்கை சட்டை ஒன்றை எதிரி ஹரிதாஸ் எடுத்து கொடுத்தார் அதன் லேபிளில் ஸ்டைலுக் tpm என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ரத்தக்கரை படிந்த கருப்பு நிற பேன்ட்டையும் ஹரிதாஸ் என்பவர் போலீசாரிடம் ஒப்படைத்தார். மேற்படி கருப்பு நிற பேன்டையும் ஹரிதாஸ் புதருக்குள் இருந்து எடுத்துக் கொடுத்தார். அதை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள். மேற்படி மகஜரில் நானும் கிராம உதவியாளர் சண்முகமும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள

முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3.** என்னிடம் காட்டப்படும் **இரத்தக்கரை படிந்த வெளிறிய சந்தன நிறம் கொண்ட அரைக்கை சட்டை சா.பொ.2 கருப்பு நிற பேண்ட் சா.பொ.3**.

5. பின்னிட்டு கவிதா தன்னுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியவாறு போலீசார் உடன் வெள்ளகோவில் காமராஜபுரத்தில் எதிரி கவிதா என்பவரது அம்மா வீட்டில் உள்ள பாத்ரூமில் வைக்கப்பட்டிருந்த சிகப்பு மஞ்சள் மற்றும் பச்சை நிறம் கொண்ட ரத்தக்கரை படிந்த சில்க் சேலை ஒன்றையும், பின்னிட்டு ரத்தக்கரை படிந்த சிகப்பு நிற வெள்ளை கருப்பு பூ போட்ட ஜாக்கெட் ஒன்றும் கவிதா என்பவர் போலீசாரிடம் எடுத்து ஒப்படைத்தார். மேற்படி சேலை மற்றும் ஜாக்கெட்டை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள். அதில் நானும் கிராம உதவியாளர் சண்முகமும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையததான். மேற்படி **மகஜர் அ.சா.ஆ.4. ரத்தக்கரை படிந்த மேற்படி சில்க் சேலை சா.பொ. 4 ஜாக்கெட் சா.பொ.5**, சாட்சி ஹரிதாஸ் தன்னுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி கவிதாவும் ஹரிதாசும் உல்லாசமாக இருந்ததை ராமு என்பவர் பார்த்துவிட்டு ஹரிதாஸ் அழைத்து நீ இனிமேல் இங்கு வந்தால் கொலை செய்து விடுவதாக மிரட்டினார் என்றும், ஹரிதாசும் கவிதாவும் உல்லாசமாக இருக்க வேண்டும் என்று சொன்னால் ராமு என்பவரை கொலை செய்தால்தான் அது நடக்கும் என்று நினைத்தார்கள் என்றும், 21.10.2018 ஆம் தேதி 4.30 மணி அளவில் ஹரிதாஸ் என்பவர் கவிதாவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கவிதாவின் கணவர் ராமு என்பவரை கொன்று விடலாம் என்று திட்டம் தீட்டி அவரை தாராபுரத்துக்கு வருமாறு தொலைபேசியில் தகவல் தெரிவித்ததாகவும் ஹரிதாஸ் தனக்கு பழக்கமான வேலுசாமி என்பவரது காரை எடுத்துக்கொண்டு, தாராபுரத்தில் பேருந்து நிலையத்தில் இருந்த கவிதாவை ஏற்றுக்கொண்டு, வெள்ளக்கோவில் புதுப்பை ஆறுமுகம் பட்டறைக்கு சென்று பார்த்தபோது ராமு அங்கு இல்லை என்றும் பின்னிட்டு புதுப்பை பாலம் அருகில் கிழப்புறம் ராமு என்பவர் குடிபோதையில் வந்து கொண்டிருந்ததாகவும், ராமுவை

வலுக்கட்டாயமாக காரில் ஏற்றி நல்லசெல்லிபாளையம் அருகில் இருந்த ஈட்டேரிக்கு அருகில் காரை நிறுத்தி ராமுவை தரத்தர என வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்று அங்கிருந்த ஓடைக்கல் ஒன்றை எதிரி கவிதா எடுத்துக் கொண்டு அங்கிருந்த சோளக்காட்டில் வைத்து ராமுவை ஹரிதாஸ் அடித்து உட்கார வைத்தும், கவிதாவிடமிருந்து மேற்படி ஓடைக்கல்லை எதிரி ஹரிதாஸ் வாங்கி தலை மற்றும் முகத்தில் ஓங்கி குத்தியதாகவும், ராமு என்பவர் சத்தம் போட்டதாகவும், கவிதா என்பவர் ராமுவின் கால்களை இறுக்கி பிடித்தும் ஹரிதாஸ் என்பவர் மேற்படி ராமுவின் கழுத்தில் கால்களை வைத்து அழுத்தியும் ராமுக்கு பேச்சு இல்லாமல் ஆகிவிட்டதாகவும் அவரது துணிகளை எல்லாம் கழற்றி பக்கத்தில் போட்டு விட்டதாகவும், மீண்டும் முனங்கி கொண்டிருந்த ராமுவை மல்லாக்காக படுக்க வைத்து மார்பு மற்றும் கன்னத்தில் ஓங்கி ஓங்கி குத்தியதாகவும் ராமு பேச்சு மூச்சு இன்றி இருந்ததாகவும், பின்னிட்டு ராமுவை அங்கேயே விட்டுவிட்டு கவிதாவும் எதிரி ஹரிதாசும் காரை எடுத்துக் கொண்டு புதுப்பை ஆத்துப்பாலத்து அருகில் ஹரிதாஸ் அணிந்திருந்த ரத்தக்கரை படிந்த துணிகளை அங்கேயே வீசிவிட்டு காருக்குள் இருந்த மாற்றுத் துணியை எடுத்து மாற்றிக்கொண்டு கவிதாவின் அம்மா வீட்டிற்கு சென்று கவிதா தன்னுடைய துணிகளை மாற்றிக் கொண்டு கவிதாவையும் அவரது மகன் சங்கரையும் அழைத்துக் கொண்டு எதிரி ஹரிதாஸ் காங்கேயம் பேருந்து நிலையத்தில் எதிரி கவிதாவையும் அவரது மகனையும் இறக்கி விட்டு விட்டு ஹரிதாஸ் காங்கேயம் சென்று வேலுசாமி உடைய காரை அவரது வீட்டில் விட்டுவிட்டும் தாராபுரம் ஹரிதாஸ் வீட்டிற்கு சென்று விட்டதாக சொன்னார்.

6. தன்னையும் எதிரி கவிதாவையும் அழைத்துச் சென்றால் கொலைக்கு பயன்படுத்திய கார் கொலை செய்த இடம், கொலைக்கு பயன்படுத்திய ஓடைக் கல் பாலத்துக்கு அடியில் வீசப்பட்ட துணிகளை ஒப்படைப்பதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். **ஹரிதாஸ் என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சாஆ.5**, எதிரி கவிதா தன்னுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னையும் எதிரி ஹரிதாஸையும் அழைத்துச் சென்றால்

கொலைக்கு பயன்படுத்திய கார், கொலை செய்ய செய்த இடம், கொலைக்கு பயன்படுத்திய ஓடைகல், தனது அம்மா வீட்டில் இருக்கும் தன்னுடைய துணிகள் ஒப்படைப்பதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். **கவிதா என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6**. மேற்படி கவிதாவின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். வழக்கு தொடர்பாக ஆய்வாளர் விசாரித்தார்.(ச.பொ.1 குறியீடு செய்யப்பட்டதற்கு பிறகு மூலனூர் காவல்நிலைய ஆய்வாளரிடம் இடைநிலைபொறுப்பாக ஒப்படைக்கப்பட்டது)

**<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் கடந்த 10.2014 முதல் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கிராம நிர்வாக அலுவலருக்கு வழிகாட்டி விதிமுறைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதன் அடிப்படையில் தான் நான் செயல்பட வேண்டும் என்று சொன்னால் சரிதான். வருவாய்த் துறை பணிகள் தவிர அயல் பணிகளுக்கு செல்வதாக இருந்தால் என்னுடைய உயர் அதிகாரிகளிடம் நான் அனுமதி பெற வேண்டும் என்று சொன்னால் சரிதான். அசாதாரண சூழ்நிலையில் என்னுடைய ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் ஏதேனும் பிரேதம் இருந்தால் அது குறித்து தனி அறிக்கை தயார் செய்து அதை மூன்று படிகளாக தயார் செய்து ஒன்றை அருகில் இருக்கும் காவல் நிலையத்திற்கும் மற்றொன்று நீதித்துறையை நடுவர் நீதிமன்றத்திற்கும் அனுப்ப வேண்டும் என்றாலும் மற்றொரு படியே என்னுடைய அலுவலக கோப்பில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டியதில்லை. அவ்வாறு நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் அனுப்ப வேண்டியதில்லை என்று நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு மேற்படி தனி அறிக்கை எதுவும் நான் அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. புகாரிலும் போலீசார் என்னை விசாரித்த போதும் பிரேதத்தை குறிப்பாக எத்தனை மணிக்கு யாருடன் பார்வையிட்டேன் என்று சொல்லவில்லை என்று

சொன்னால் சரிதான். பிரேதத்தை பார்த்தவுடன் சம்பவ இடத்தின் வரைபடத்தையோ அல்லது மகஜரையோ நான் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பிரேதத்தை பார்த்தபோது அதில் கிடந்த பொருட்களை யார் எப்போது போட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். புகாரில் என்னுடைய அலுவலக முத்திரையோ அல்லது என்னுடைய அலுவல் முத்திரையோ வைக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பார்த்தபோது மேற்படி பிரேதம் அழுகிய நிலையில் இருந்தது என்று சொன்னால் சரிதான் புழு பிடித்த நிலையில் இருந்தது. அன்று பிணம் இருந்த நிலையில் என்னாலோ அல்லது அருகில் இருந்த நபர்களாலோ மேற்படி பிணத்தை யார் என்று அடையாளம் காட்ட முடியாது என்று சொன்னால் சரிதான். 25.10.2018 ஆம் தேதி என்னை இந்த வழக்கில் சாட்சியாக இருக்க போலீசார் அழைப்பானை எதுவும் வழங்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய அன்றாட அலுவல்களை குறிப்பேட்டில் நான் குறித்து வைக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். மேற்படி தினம் நான் இந்த வழக்கில் சாட்சியாக செல்வதற்காக என்னுடைய உயர் அதிகாரிகளிடம் உத்தரவு எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரிதான்.சாட்சியாக இருந்துவிட்டு வந்த பிறகு அது குறித்து என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு தனி அறிக்கை எதுவும் சமர்ப்பித்தேனா என்றால் இல்லை தொலைபேசி மூலம் தகவல் சொன்னேன்.

3. 25.10.2018 ஆம் தேதி நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பு எதிரிகளிடம் போலீசார் என்ன பேசினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1 மற்றும் 2வது எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியில் மேற்படி ஓடைக்கல் எந்த இடத்தில் குறிப்பாக மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான் மறைத்து வைக்கப்பட்டதாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்த போனவரின் பேன்ட் மட்டும் சட்டையை எந்த இடத்தில் ஒளித்து வைத்திருந்தேன் என்றும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஒப்புதல்

வாக்குமூலத்தை யார் எந்த இடத்தில் வைத்து தட்டச்சு செய்தார்கள் என்பதும் மேற்படி அனுமதிக்கப்பட்ட பகுதியில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.2, அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4–ல் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கை பொறுத்து கார் கைப்பற்றப்பட்டதாக குறிப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணங்களில் எதிரிகளின் கையொப்பம் பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்கள் எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரை பதிவு செய்யப்பட்டது என்று குறிப்புகள் எதுவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு பொருட்கள் எந்த இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டன என்பது குறித்து மகஜர்களில் குறிப்பாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

4. நான் முதலில் பிரேதத்தை பார்த்தபோது அதன் அருகில் இருந்த பொருட்களை காவல்துறையினர் என் முன்னிலையில் கைப்பற்றி என்னிடம் கையெழுத்து எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். 25.10.2018 ஆம் தேதி நான் இந்த வழக்கில் சாட்சியாக இருந்தது தொடர்பாக அன்றைய தினம் மாலையில் போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் இந்த வழக்கில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் என் முன்னிலையில் எதிரிகளிடமிருந்து எந்த விதமான ஒப்புதல் வாக்குமூலத்தின் பதிவு செய்யவில்லை என்றாலும், எதிரிகளை என் முன்னிலையில் கைது செய்யப்படவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் போலீசார் என் முன்னிலையில் எந்த சான்று பொருட்களையும் கைப்பற்றவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. என் முன்னிலையில் போலீசார் எந்த விதமான மகஜர்களையும் வேறு ஆவணங்களின் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அரசு பணியில் இருப்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அரசு துறைக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.நான் கிராம நிர்வாக அலுவலர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் எதையும் இந்த வழக்கில் நான்

கடைப்பிடிக்கவில்லை என்று சொன்னால் சரி அல்ல. நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2–ம் எதிரி மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்கிறார்**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.13 19:17:24 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

<u>DEPOSITION OF WITNESS</u>

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021 Deposition of Witness for : P.W.2**

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்லமுத்து | Caste | |
| Father's Name | : | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 13.10.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் நல்லசெல்லிபாளையத்தில் குடி இருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய பெயர் நத்தமேட்டு தோட்டம் என்பதாகும். கடந்த 23.10.2018 ஆம் தேதி மாலை சுமார் 3.00 மணிக்கு நான் என்னுடைய வீட்டில் இருந்தேன். என்னுடைய மகள் சரிதா என்னுடைய தோட்டத்தில் ஒரு பாடி (பிணம்) கிடப்பதாக சொன்னார். நான் மேற்படி இடத்திற்கு சென்று பார்த்தேன். நான் சென்று பார்த்தபோது அங்கு 35 அல்லது 40 வயதுடைய ஆண் பிணம் கிடந்தது. மேற்படி பிணம் நிர்வாணமாக கிடந்தது. பிணத்துக் அருகில் ஒரு கருப்பு நிற பேண்ட் மற்றும் இரண்டாக கிழிந்து போன ஒரு பெர்முடாஸ், வெள்ளை மஞ்சள் நீலநிறம் கொண்ட முழுக்கை சட்டை ஒன்றும் இருந்தது. கருப்பு கலர் செருப்பு ஒன்று ஜோடி கிடந்தது. விசிட்டிங்கார்டு ஒன்று கிடந்தது அதன் அருகில் ஒரு இரத்தகரை படிந்த ஓடைக்கல் கிடந்தது. பிணத்தின் முகம் அடையாளம் தெரியாத அளவுக்கு கொத்தப்பட்டு கிடந்தது. நான் உடனடியாக மணியகாரருக்கு போன் பண்ணி தகவலைச் சொன்னேன். பிறகு போலீசார் சம்பவ இடத்தில் வந்து என்னை விசாரித்தார்கள். பிணத்தை பார்வையிட்டார்கள்.

**<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய தோட்டத்தை சுற்றி நிறைய நபர்களுடைய தோப்பு மற்றும் தோட்டங்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய தோட்டம் மற்றும் அருகில் இருக்கும் நபர்களின் தோட்டங்களில் எப்போதும் விவசாயம் நடக்கும் என்று சொன்னால் சரிதான். என்னுடைய தோட்டத்திலிருந்து அருகிலேயே மூலனூரில் இருந்து வெள்ளகோவில் செல்லும் சாலை உள்ளது என்று சொன்னால் சரிதான். பிணத்திற்கு அருகில் இருந்த பொருட்கள் எப்போது இருந்து கிடைக்கிறது என்றும் அவை யாருடைய பொருட்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எத்தனை மணிக்கு மணியகாரரிடம் மேற்படி தகவலை போன் மூலம் தெரிவித்தேன் என்று நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பார்த்துக் கொண்டிருந்தபோது போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள் என்று சொன்னால் சரிதான்.

**2–ம் எதிரி மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்கிறார்**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.13 19:17:30 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021 Deposition of Witness for : P.W.3**

| | | |
|---|---|---|
| Name | : சிவமுத்து | Caste |
| Father's Name | : | Calling |
| Age | : | Taluk |
| Village | : | District |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 13.10.2025

**முதல் விசாரணை**

நான் கருப்பண்ண வலசுவில் குடியிருக்கிறேன் விவசாயம் செய்து வருகிறேன். 23.10.2018 ஆம் தேதி மாலை சுமார் 4:30 அல்லது 5 மணி அளவில் என்னுடைய தோட்டத்தில் இருந்தபோது, அ.சா.2 செல்லமுத்து என்னை போன் மூலம் தொடர்பு கொண்டு அவருடைய தோட்டத்தில் யாரோ ஒரு அடையாளம் தெரியாத நபர் இறந்து கிடப்பதாகவும் அதை போய் பார்க்கலாம் என்றும் என்னை அழைத்தார். நான் அங்கு சென்றபோது சுமார் 5:30 மணி இருக்கும். நான் சென்று பார்த்தபோது அழுகிய நிலையில் நிர்வாணமாக ஒரு ஆணின் பிணம் கிடந்தது. ஒரு சட்டை ஒரு பேண்ட் கிழிந்த நிலையில் ஒரு பர்முடாஸ் மற்றும் செருப்பு ஆகியவை கிடந்தது விசிட்டிங் கார்டு போன்ற ஒரு அட்டை பக்கத்தில் கிடந்தது. ஒரு ஓடைக்கல் கிடந்தது அதில் ரத்தம் ஆனது போல தெரிந்தது நான் அருகில் சென்று பார்க்கவில்லை. போலீசார் என்னை இது தொடர்பாக என்னை விசாரித்தார்.

**1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.2 செல்லமுத்து என்னிடம் போன் மூலமாக தகவல் சொன்னதை நான் போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி தினத்தில் சுமார் 5:30 மணிக்கு சம்பவம் சென்று நான் பிணத்தைப் பார்த்ததாக குறிப்பிட்டுள்ளேன்

என்றால் குறிப்பிட்டுள்ளேன் மேற்படி இடத்தில் அருகில் இருந்த பொருட்கள் எப்போதிலிருந்து அங்கு கிடக்கிறது என்றும் யார் அங்கு கொண்டு வந்த போட்டார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மிகவும் அழுகிய நிலையில் துர்வாடையுடன் இருந்தது என்றால் சரிதான்.

**2–ம் எதிரி மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்கிறார்**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.13 19:17:35 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 56 /2021 Deposition of Witness for : P.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செந்தில்குமார் | Calling | : | |
| Father's Name | : | கந்தசாமி | Taluk | : | |
| Age | : | | District | : | |
| Village | : | | | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 13.10.2025

**முதல் விசாரணை**

நான் எல்லப்பாளையத்தில் குடி இருக்கிறேன் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். கடந்த 23 10 2018 ஆம் தேதி மதியம் 3:30 மணிக்கு என்னுடைய தோட்டத்திலிருந்தேன். அப்போது என்னுடைய அக்கா சிவாத்தாள் என்பவர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன்னுடைய சோளக்காட்டில் ஒரு அடையாளம் தெரியாத பிணம் கிடப்பதாகச் சொன்னார். நான் சுமார் 3.45 – 4.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன் நான் போய் பார்த்தபோது ஒரு ஆண் சடலம் நிர்வாண கோலத்தில் கிடந்தது. மேற்படி உடலுக்கு அருகில் வெள்ளை நீலம் மஞ்சள் கோடு போட்ட முழுக்கை சட்டை கிடந்தது. ஒரு கருப்பு நிற பேண்ட் கிடந்தது. ஒரு கருப்பு நிற பர்முடாஸ் கிடந்தது. கருப்பு நிற செப்பல் கிடந்தது. ரத்தக்கரை படிந்த ஓடக் கல் ஒன்று கிடந்தது. சிவமுத்து என்பவரிடம் தகவல் சொல்லி நானும் அவருடன் சென்றேன். மேற்படி பிணத்தின் வலது புருவத்திற்கு மேல் காயம் இருந்தது. பிணத்தின் இடது பக்கத்தலையில் இரண்டு காயம் இருந்தது. பின்னிட்டு சம்பவ இடத்தில் மணியக்காரர் வந்தார். பொதுமக்கள் வந்து விட்டார்கள். அதன் பிறகு போலீசார் சம்பவ இடத்துக்கு வந்தார்கள். போலீசார் என்னை சம்பவஇடத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் பிரேதத்தை பார்வையிட்டார்கள் பிரேதம் அழுகிய நிலையில் புழு ஏறிய

நிலையிலும் கிடந்தது.

**<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசாரிடம் நான் எத்தனை மணிக்கு மேற்படி பிரதேதத்தை பார்த்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன். நான் சென்றபோது சம்பவ இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லை. நான் முதல் விசாரணை குறிப்பிட்ட பொருட்கள் மேற்படி இடத்தில் எப்போதிலிருந்து கிடக்கிறது என்றும் யாரால் போடப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இப்படி பிரேதம் அழுகிய நிலையில் துர்நாற்றத்துடன் இருந்தது என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கு நான் ஏற்கனவே சென்று உள்ளேன். மேற்படி தோட்டத்தை சுற்றி வேறு தோட்டங்கள் விவசாய நிலங்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

**2–ம் எதிரி மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்கிறார்**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.13 19:17:42 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.